276. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1979-80ஆம் ஆண்டிற்கான 6–வது ஆண்டு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்). 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

**ஆ. அறிக்கைகள் அறிவுப்புகள் ஏனைய தாள்கள்.**

197. கோரிக்கை எண். 11– மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு 1981-82 (தமிழ், ஆங்கிலம்)

இணைப்பு.

[..23..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 956க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில் ஆறுகள் மற்றும் ஓடைகளில் ஓடும் தண்ணீரில் (மழைத் தண்ணீரையும் சேர்த்து) 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மழைக்கால வெள்ளம் கடலில் கலப்பதைத் தடுத்து, அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடுதான் நடுத்தரப்பாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில காலங்களில் மட்டுமே, எதிர்பாராத அளவிற்கு மழை பெய்யக்கூடும். அவ்விதம் கிடைக்கும் மழை நீரை, எல்லா ஆறுகளிலும் அணைகளைக் கட்டி, தேக்கி வைப்பது என்பது சாத்தியமானதல்ல. பொருளாதார ரீதியிலும் சாத்தியமல்ல. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் மிகுதியான மழை நீர் கடலில் சென்று கலப்பதைத் தவிர்க்க முடியாது.

(ஆ) & (இ): பொது பணித்துறையில் நீர்பாசன திட்ட ஆய்விற்காக ஒரு தனித் தலைமைப் பொறியாளர் இருக்கிறார். மேலும், இருக்கின்ற நீர்வளங்களை பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக ''நீர் உபயோகத் திறன் குழு'' (Water Utilisation Committee) ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது.